

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : துன்புறுவோருக்கு ஆறுதல்: துன்புறும் யாவரும் குறிப்பாக ஏழைகள், அகதிகள், ஒதுக்கப்பட்டோர் அனைவரும் நமது சமூகங்களில் வரவேற்கப்பட்டு ஆறுதல் அடைய வேண்டுமென்று**

**பிப்ரவரி மாத கரு : மனிதத்தன்மையில் கடவுளின் கொடையை வரவேற்றல்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 12 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, த, ம) | பொதுக்கால 6-ஆம் ஞாயிறு |
| பிப் 16 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 17 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 18 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| பிப் 19 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | பொதுக்கால 7-ஆம் ஞாயிறு<br>பொதுக்கால 7-ஆம் ஞாயிறு<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| பிப் 13 திங் | மாலை 7.30<br>மாலை 8.00 | பெர். மை 2-2<br>பெர். மை 1-1 | RCIA<br>பமேபகு கூட்டம் |
| பிப் 14 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மையம் | பங்கு பரிந்துரை செபம்<br>பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| பிப் 15 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>புந்தோங் தீகா | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>அருங்கொடை (த) |
| பிப் 16 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>பஒகு கூட்டம் |
| பிப் 17 வெள் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஜெலாப்பாங்<br>புந்தோங் தீகா | அருங்கொடை (த)<br>இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| பிப் 18 சனி | காலை 10.30<br>மாலை 5.30<br>மாலை 6.30 | பெர். மை 1-1<br>ஆலயம்<br>ஆலயம் | பீடத்துவ நிகழ்வுகள் கூட்டம்<br>செபமாலை/ சகாய மாதா நவநாள்<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| பிப் 19 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.15<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பெர். மை 2-1<br>ஜெலாப்பாங் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம்<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய குழு கூட்டம் |

<u>பிப்ரவரி மாத திருமணம் 2017</u>

பிப் 25 மாலை 4.30 திருமணம் (த) பெர்னட் த/பெ சந்தனசாமி & ஜெனிபர் த/பெ அந்தோணி

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

1. புனித லூர்து அன்னையின் திருவிழாவின்போது உங்களின் ஆதரவுக்கும், செபங்களுக்கும் இறைவனின் அனைத்து மக்களுக்கும், பல்வேறு பணிக்குழுக்கள், அதிச தலைவர்கள், சிற்றாலய தலைவர்கள் ஆகிய உங்கள் யாவருக்கும் நன்றி.

2. **பரிந்துரை செபம்:** புனித செபஸ்தியார் சிற்றாலய அருங்கொடை மறுமலர்ச்சி குழுவினர் ஏற்பாட்டில் பரிந்துரை செபம் நடைபெறும். அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள். நாள்: 18/2/17 (சனி) நேரம்: மாலை 4.00 ~ 5.30 இடம்: புனித செபஸ்தியார் சிற்றாலயம்

3. **மெழுகுவர்த்திகள் விற்பனை:** ஆசியா இளைஞர் தினத்திற்கு திருப்பயணம் செல்வதற்கு நிதி திரட்டும் முயற்சியாக இளைஞர்கள் மெழுகுவர்த்திகளை விற்பனை செய்கின்றனர். தயவு செய்து ஆதரவு தாருங்கள்.

4. **தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்:** தமிழ் மறைக்கல்வி வகுப்பில் ஆள்சேர்ப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. சில வகுப்பில் 3க்கும் குறைவான மாணவர்களே இருக்கின்றனர். தமிழ் மறைக்கல்வி வகுப்புகள் வேண்டுமென்று கேட்டீர்கள். ஆனால் அதை முக்கியமானதாக எடுத்துக்கொள்ளவில்லை. மார்ச் மாதம் முதலாவது வாரம் வரை உங்களுக்கு கால அவகாசம் தருகிறோம். இன்னும் அப்படியே இருந்தால் 5 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள வகுப்பை மூடிவிட்டு அவர்களை ஆங்கில மறைக்கல்வி வகுப்பிற்கு அனுப்புவோம்.

5. **உருவாக்கம்:** மறைக்கல்வி குழுவிற்கு முறைகள் பற்றிய உருவாக்கம் தந்தை. மார்க் மைக்கல் அவர்களால் வழிநடத்தப்படும். நாள்: 25/2/17 (சனி) நேரம்: காலை 9.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம்

6. **உலகளவிலான மகளிர் தின கொண்டாட்டம்:** 12/3/17 (ஞாயிறு) காலை 10.00 ~ மதியம் 1.00 வரை புலூமாவில் நடைபெறும். பதிவு பாரங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். இறுதி நாள்: 19/2/17 தொடர்புக்கு: ஜெனட் (017-5798987)

7. **வேலைவாய்ப்பு:** மருத்துவ அனுபவம் உள்ள பராமரிப்பாளர்கள் (முழுநேர/ பகுதிநேர) ஈப்போ மற்றும் பொது பணியாளர், கம்போங் சீமி முதியோர் இல்லத்திற்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். தொடர்புக்கு: ஹெலன் லாய்/ எலிசியா யோங் (05-5473252/ 05-5452449)

8. **திருநீற்று புதனுக்கு 2016இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள் :** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் 1 மார்ச் 2017ல் வருகிறது. தயவு செய்து பழைய ஓலைகளை 26 பிப்ரவரி (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக ராணியிடம் (தூயகப் பணியாளர்) அல்லது பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

9. **அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 11 மார்ச் 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

10. **24 பிப் 2017 மலேசியாவிற்கான செப நாளையொட்டி திருப்பலி மற்றும் ஆராதனை நேரலை:** பினாங்கு, பரிசுத்த ஆவி பேராலயத்தில் மாலை 7.30க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

11. **மலேசியாவிற்கான செப நாள் 2017 - திருப்பலி & ஆராதனை:** மலேசியா கத்தோலிக்க ஆயர் மன்றம் (கஆடி) ஏகமனதாக அனைத்து ஆலயங்களிலும், சிற்றாலயங்களிலும், மத சார்புடைய சமூகங்களிலும் திருவிழிப்பு செபம் வரும் 24 பிப் 2017 (வெள்) மாலை 7.30 ~ இரவு 10.00 வரை திருப்பலி மற்றும் ஆராதனையுடன் நடத்த முடிவு செய்துள்ளது.

12. **மலேசியன் கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் 2: நாள்:** 23 ~ 27 ஜூன் 2017 (வெள்~செவ்) **இடம்:** பினாங்கு தீவு **பதிவிற்கான இறுதி நாள்:** 31 மார்ச் 2017 (வெள்) **பதிவு கட்டணம்:** ரிம 150/- **தொடர்புக்கு:** பினாங்கு மறைமாவட்ட இளைஞர் கட்டமைப்பு (04-2274851)/ மின்னஞ்சல்: pdyn@pgdiocese.org

13. **பழைய செய்திதாள்கள்:** கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு, புதிய சிற்றாலயத்தை கட்டுவதற்காக நிதி திரட்ட பழைய செய்தித்தாள்களை சேகரித்து விற்க திட்டமிட்டுள்ளது. கொடுக்க விருப்பமுள்ளவர்கள் அவைகளை கொண்டு வந்து பங்கு மண்டபத்தில் கொடுக்கலாம்.

14. **ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

15. **எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

16. **விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

17. **கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜனவரி 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- 221,489.38 அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- 241,357.51 (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)